[திரு. செ. செம்மலை] [1984 பிப்ரவரி 20

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1971–72 முதல் 1976-77 வரையிலான ஆண்டு கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கையையும் நான் பேரவைக்கு அளிக்கின்றேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இந்த பச்சையப்பா ட்ரஸ்ட் என்பதிலே 1983–ஆம் ஆண்டு டிசம்பரிலே இருந்து தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு நிர்வகித்து வருகிறார்கள். அவ்வாறு தனி அதிகாரிகள் நியமிப்பதற்காகச் சொல்லப்பட்ட காரணம் என்னவென்றால் எலெக்ட் ஆன கமிட்டி மெம்பர்களுக்குள் தகராறு என்ற அந்தக் காரணத்தை முன்னிட்டு அதனைக் கலைத்துவிட்டு தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறீர்கள்.. தகராறு அங்கே மட்டும்தான் வருகின்றதா? இங்கே சட்டச்சபையிலே கூடத்தான் வருகின்றது. அதற்காகச். சட்டசபையைக் கலைத்து விடமுடியுமா? எனவே தகராறு ஒன்றையே காரணம் காட்டி எலக்டட் பாடியினைக் கலைத்தது சரியல்ல. இப்போது மூன்றாண்டு காலமாக அது தனி